**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூத்துக்குடி**

**அசல் வழக்கு எண்.159/2023**

**வா.சா.1**

பெயர் – பிளாரன்ஸ் நவனீதம்

தேதி – 07.07.2026

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1) நான் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் குறுந்தலைப்பில் சிவராமன் என்று மட்டுமே 3ம் பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளேனே தவிர, அவர் துணை பதிவாளர் ஸ்தானத்தில் குறிப்பிட்டுள்ளதாக துலங்காது என்றால் சரிதான். அதுபோல் நெடுந்தலைப்பிலும் துணைப்பதிவாளர் என்ற நிலையில் 3ம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 0.1183 தூத்துக்குடி கூட்டுறவு சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதை நான் என் பெயரில் வாங்கியுள்ளேன். 3ம் பிரதிவாதி சிவராமன் குறிப்பிட்டு எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து என்னை மிரட்டினார் என குறிப்பிட்டு பிராதில் சொல்லப்படவில்லை என்றால் என்னை நேரடியாக மிரட்டவில்லை. ஆனால் மனுக்கள் என் மீது போட்டார். எந்த தேதியில் மனுக்கள் போட்டார் என்று குறிப்பிட்டு பிராதில் சொல்லப்படவில்லை என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை.

2) 3ம் பிரதிவாதி சிவராமனுக்கும் எனக்கும் வழக்கு சொத்து தொடர்பாக தாவாவே தவிர தனிப்பட்ட முறையில் எங்களுக்குள் எந்த பிரச்சனையும் கிடையாது என்றால் சரிதான். நான் 0.1183 கூட்டுறவு

கட்டிட சங்கத்தின் A உறுப்பினர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு நாளாக B உறுப்பினராக இருந்தேன் என்றால் நான் B உறுப்பினராக இருந்ததில்லை. எந்த தேதிய பொதுக்குழு தீர்மானத்தின் படி நான் A உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் தேதி என்று ஞாபகம் இல்லை. அந்த விபரங்களை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் O.1183 தூத்துக்குடி கூட்டுறவு கட்டிட சங்கத்தின் A வகுப்பு உறுப்பினர் கிடையாது என்றால் சரியல்ல.

3) சங்கத்தினுடைய உறுப்பினர் பங்கு தொகை புத்தகத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எவ்வித கையொப்பம் செய்தது கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.03.2024 ல் த.வ.எண்.2/2023–2024 என்ற தண்ட வழக்கு ஆணை பிறப்பிப்பட்டது என்றால் சரிதான். இந்த தண்ட வழக்கு ஆணையில் நான் மேற்படி சங்கத்தில் உறுப்பினரே கிடையாது என்றும், முருகன் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக என்னை சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. என் சங்க உறுப்பினர் எண்.628 ஆகும்.

4) தண்ட வழக்கு ஆணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சங்கத்திற்கு பாத்தியப்பட்ட வழக்கில் சேர்த்துள்ள வழக்கு சொத்தை தவிர மேலும் கூடுதலான இடங்களை போலி ஆவணங்கள் மூலம் உறுப்பினர் அல்லாத நபர்களுக்கு பத்திர பதிவு செய்து கொடுத்து மேற்படி சங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறி மேற்படி தொகையை வசூல் செய்ய தண்ட வழக்கு ஆணை பிறப்பித்து குற்றவியல் நடவடிக்கைக்காக முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தார்கள். அனைவருக்கும் சேர்த்து முதல் தகவல் அறிக்கை மற்றும் தண்ட வழக்கு உத்தரவு போட்டார்கள்.

5) O.1183 கூட்டுறவு கட்டிட சங்கத்திற்கான மாவட்ட பதிவாளர் வேறு, TC83 தூத்துக்குடி மாவட்ட கிராம நிர்வாக அலுவலகர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கான மாவட்ட பதிவாளர் வேறு என்றால் சரிதான். சங்க தனி அலுவலரின் கூட்ட தீர்மானம் எண் .1 நாள் 13.03.2010 படி மேற்படி TC 83 தூத்துக்குடி மாவட்ட கிராம நிர்வாக அலுவலகர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கான செயலாளர் முருகன் என்பவரை O.1183 தூத்துக்குடி கட்டிட சங்கத்தினுடைய செயலாளராக நியமனம் செய்துள்ளதாக சொல்லியுள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. WP MD No.6406/2010 என்ற நீதி பேராணை மனுவில் O.1183 கூட்டுறவு சங்கத்தை கலைக்க உத்தரவுக்கு தடை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக என் பிராதில் சொல்லியுள்ளது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் கணவர் ஆடிட்டராக இருப்பதால் எனக்கு தெரியும்.

6) அந்த உத்தரவின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி நீதிபேராணை மனுவில் பிறப்பித்த இறுதி உத்தரவு என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. அந்த நீதிபேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது ரத்து செய்யப்பட்டு இறுதி உத்தரவில் மேற்படி சங்கத்தை கலைத்தல் உத்தரவை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது என்றால் சரியல்ல. தடை உத்தரவு வாங்கியுள்ளார்கள். நாங்கள் 2010 லேயே சொத்தை வாங்கிவிட்டோம். பத்திரம் பதிந்தது எப்போது என்றால் 29.04.2011 ஆகும். அதற்கு முன்னதாகவே மேற்சொன்ன நீதிபேராணை மனுவில் 08.10.2010 ல் இறுதி உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. மேற்படி O.1183 தூத்துக்குடி கூட்டுறவு கட்டிட சங்கத்தை

கலைத்து உத்தரவு பிறப்பித்த பின்னர் அதை மேற்படி நீதிபேராணை மனுவில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை கலைத்தல் உத்தரவை உறுதி செய்த பிறகு தான் நான் மேற்படி வழக்கு தபசில் சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் பிறப்பித்து கொடுக்கப்பட்டுள்ளதால் எனக்கு தாவா சொத்தின் மீது எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கலைக்கும் முன்பே வாங்கிவிட்டேன்.

7) இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு கடந்த 28.11.2023 அன்று தாவா சொத்தை என் மகன் தவேல்சாவுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி, தாங்கள் இவ்வழக்கில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டதால் இவ்வழக்கை மேலநடத்த எனக்கு எவ்வித அறுகதையும் இல்லை என கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு நான் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து விட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் வழக்கு பதிவு செய்ததால் என் மகனுக்கு பிரச்சனை வரக்கூடாது என்று ரத்து செய்துவிட்டேன்.

8) என் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.4/2024 முதல் தகவல் அறிக்கையின் மீது முன்ஜாமீன் கேட்டு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் CRLOP MD No.7772/2024 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் உத்தரவு தான் நான் உயர் நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவின் நகல் என்றால் சரிதான். அந்த உத்தரவு **பிவாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த முன்ஜாமீன் மனுவில் கூட்டுறவு சங்கத்திற்கே சொத்தை மீண்டும் எழுதி கொடுத்திவிடுகிறேன் என்று சொல்லி அதை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் தான் எனக்கு முன் ஜாமீன் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும்

பிவாசாஆ.1 உத்தரவில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி பிவாசாஆ.1 உயர் நீதிமன்ற உத்தரவை படித்து பார்த்துவிட்டு அதில் அவ்வாறு தான் உள்ளது என்று கூறுகிறார். நான் அதை முறைப்படி தான் வாங்கியுள்ளேன். அதனால் திரும்ப கொடுக்க தேவையில்லை. திரும்ப கொடுக்க தேவையில்லை என்று நானே சொல்லிக்கொள்கிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக சாட்சியம் அளிப்பது என்னுடைய முன் ஜாமீனை ரத்து செய்ய வழிவகுக்கும் என்றால் சரியல்ல. நான் அந்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

9) 29.04.2011ல் எனக்கு கிரைய ஆவணம் பதிவு செய்துகொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய தொகையில் எத்தனை சதவீதம் பங்குத்தொகை சங்கத்தில் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் ரூ.3600/- செலுத்தினேன். சொத்தின் கிரைய தொகை எவ்வளவு என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 கிரைய ஆவணத்தில் கிரைய தொகை ரூ.3600/- என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக கூட்டறவு கட்டிட சங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தை ஒரு நபருக்கு கிரைய வாங்கும் போது கிரைய தொகையில் 7 சதவீதம் வைப்பீடாக செலுத்த வேண்டும் என்றால் எனக்கு தெரியவில்லை.

10) நான் மேற்படி சங்கத்தின் உறுப்பினரே கிடையாது என்றாலும் , அதனால் தான் எனக்கு அந்த விபரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் கிரைய வாங்கிய ஆவணம் போலியானது என்பதால் தான் நான் சட்டப்படியாக வைப்பீடு செய்ய வேண்டிய தொகையை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 29.04.2011 தேதியில் எனக்கு கிலையம் கொடுத்ததாக சொல்லும் முருகனுக்கு தாவா சொத்தை கிரையம்

எழுதி கொடுக்க எவ்வித அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. அவர் என்னிடம் அந்த சங்கத்திற்கு பொறுப்பு அதிகாரி என்று தெரிவித்தார். முதல் தகவல் அறிக்கை முருகன் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. முறையான அதிகாரம் இல்லாத காரணத்தினால் தான் எனக்கு ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லப்படும் 29.04.2011 தேதிய கிரைய ஆவணத்தில் பொதுவாக கூட்டுறவு கட்டிட சங்கத்தின் மூலம் எழுதி கொடுக்கப்படும் கிரைய ஆவணங்களில் காணப்படும் வரைவுகள் எதுவும் நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரியல்ல.

11) என் பிராதில் 4ம் பிரதிவாதி விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டது சட்டத்தை மீறிய உத்தரவு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது குறித்து சரியா தவறா என இந்நீதிமன்றம் முடிவு செய்ய முடியாது என்றால் அது எனக்கு தெரியவில்லை. அது குறித்து முடிவு செய்ய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு தான் அதிகாரம் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராது பத்தி 10ல் 4ம் பிரதிவாதியும், அவரது வகையாட்களும் கடையை கட்ட கூடாது என்றும் தீர்வை செலுத்த கூடாது என்றும் தொடர்ந்து மிரட்டி வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

12) நான் கூட்டுறவு சங்கத்திற்கு மீண்டு சொத்தை எழுதி கொடுக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் O.1183 கூட்டுறவு கட்டிட சங்கத்தின் உறுப்பினர் எனவும்,

பிரதிவாதிகள் மேற்படி சங்கத்தின் அலுவலர்கள் எனவும், பிராது தபசில் சொத்து மேற்படி சங்கம் சார்ந்த சொத்து என நான் ஒப்புக்கொள்வதாலும் இந்நீதிமன்றத்தில் இவ்வாறு ஒரு வழக்கு தாக்கல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் தடை உள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் கட்டிடம் ஏதேனும் கட்டியுள்ளேனா என்றால் நான் ஒரு கட்டிடம் கட்டியுள்ளேன். முழுமையாக கட்டி முடித்து விட்டேனா என்றால் முடித்துவிட்டேன். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பெண்கள் கூட்டுறவு பண்டக சாலை கட்டியுள்ளேன். அதை நடத்த விடாமல் பிரதிவாதிகள் தொந்தரவு செய்து வருகிறார்கன். நான் இவ்வழக்கில் கூட்டுறவு பண்டக சாலையை நடத்த தொந்தரவு செய்கிறார்கள் என கோரி தடை உத்தரவு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் கடை என்று தான் சொல்லியுள்ளேன். நான் கோரிகள் பரிகாரகள் எதுவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு நான் தண்ட வழக்கு செலவுத்தொகை ரூ.3000/- கொடுக்க கடைமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/Sd/-R.Rajalingam.,M.B.A.,L.L.M.,
Principal District Munsif,
Thoothukudi.